மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது திருவெட்டாறு பாலமாகும். அதைத் திருத்தியமைக்க வேண்டும் என்று சொன்னால் 24 லட்ச ரூபாய் செலவாகும். இப்போது இருக்கக்கூடிய நிதி நிலைமைக்கு ஏற்பத்தான் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். ஆகவே நிதிநிலை சீரான பின்னால் அது கவனிக்கப்படும்.

போடி தொகுதியில் புதிய பாதை அமைப்பு.

*வினா எண். 133—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் போடித் தொகுதியில் பண்ணைப் புரத்தில் இருந்து சாக்குலூத்து மெட்டு வழியாக கேரளா செல்ல சாலை ஏதும் புதிதாக அமைப்பது பற்றிய திட்டம் அரசு பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) ஆம் என்றால் அந்தப்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவரவர்களே 1958-ல் 26½ இலட்சம் ரூபாய்க்கும், 1963-ல் 30 இலட்சம் ரூபாய்க்கும், 1979-ல் 52 இலட்சம் ரூபாய்க்கும் மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தச் சாலையை அமைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அனுப்பியுள்ளார்கள். இந்த சாலை அமைக்கப்படுவதினால் மதுரை—கொச்சின் தூரம் ஏறத்தாழ 60 மைல் குறைகிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தச் சாலைப் பணியை இன்னும் எடுத்துக்கொள்ளாததற்கு என்ன காரணம்? அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளும், தொழிலாளர்களும் கடந்த 30 ஆண்டுக்காலமாக இந்தச்சாலையை எதிர்பார்த்து, காத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்குறுதி கொடுத்தும் இந்தப் பணி நடைபெற முடியவில்லை. ஆகையால் மக்கள் சேவைக்காகப் பாடுபடும் நம்முடைய புரட்சித் தலைவர் அரசு உடனடியாக இந்தச் சாலையை அமைக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தமிழ்நாடு-கேரள மாநிலங்கள் எல்லையில் அமைந்திருக்கிறது. இதைப் போட வண்டுமென்றால் ஏறத்தாழ 8 கிலோமீட்டர் தூரத்திற்குப் பாட வேண்டும். அப்படிப் போடுவதாக இருந்தால் ஏறத்தாழ

1981 ஜனவரி 31]

60 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆகவே, வருகின்ற காலகட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சாலை அபிவிருத்தித் திட்டமாக இது எடுத்துக் கொள்ளப்படும்.

பெரியாற்றின் குறுக்கே உள்ள பாலம்.

*வினா எண். 134—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

பெரியாற்றின் குறுக்கே கம்பத்தை சுருளிப்பட்டியுடன் இணைக்கின்ற பாலத்தை அகலப்படுத்தி பஸ் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யும்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தற்போது இப் பணியின் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, பிரசித்திபெற்ற சுருளி நீர்வீழ்ச்சியைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் 20 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக இப்போது செல்ல வேண்டியிருக்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைச்சரவர்கள் இதைப் பரிவோடு பரிசிலித்து சீக்கிரமாக பணியைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கே ஒரு குறுகிய பாலம் இருக்கிறது. அதன் அகலம் 3.85 கிலோமீட்டர் அளவுக்கு இருக்கிறது. இதை ஒரு உயர்மட்ட பாலமாக ஆக்குவதற்கு ஏறத்தாழ 8 இலட்சம் ரூபாய் செலவாகும். இப்போது நிதிநிலை சரியில்லாததால், நிதிவசதியைப் பொறுத்து பின்னர் கவனிக்கப்படும்.

திருச்சி-கரூர் நெடுஞ்சாலை.

*வினா எண். 135—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையை (நாகப்பட்டிணம்-கடலூர் சாலை) அகலப்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ). இல்லை.

(ஆ). இக் கேள்விக்கு இடமில்லை.